[2023 ஏப்ரல் 6

முற்பகல் 11–35

(ஆ) கோவில்பட்டி நகராட்சி, தினசரி காய்கறி சந்தை, கட்டடம் புதுப்பிப்பு, மாற்று இடத்தில் புதிய கடைகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, தினசரி சந்தை, புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்று கொடுத்துள்ளார். அதில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் நீங்கள் கேட்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள். ஒரு நிமிடத்தில் ஒரு கேள்வியை கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி நகராட்சியில் சுமார் 60 ஆண்டு காலமாக பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பெயரில் தினசரி காய்கறி சந்தை செயல்பட்டு வருகிறது. கோவில்பட்டி தொகுதி மட்டுமல்லாமல், கோவில்பட்டி, சாத்தூர், விளாத்திகுளம், சங்கரன்கோவில், ஒட்டப்பிடாரம் ஆகிய ஐந்து தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 10,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள், விவசாயிகள் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போது அரசின் சார்பாக நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய கடைகள் கட்டுவதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, 250 கடைகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, அந்த தினசரி காய்கறி சந்தையில் 396 கடைகள் செயல்பட்டு வருகின்றன. மாற்று இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதால், 146 வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது அந்த வியாபாரிகளிடத்தில் பதற்றத்தையும், அச்சத்தையும் உருவாக்கியிருக்கின்றது. சந்தையில் செயல்பட்டு வரும் தினசரி காய்கறி கடை கட்டடங்களெல்லாம் கொரோனா காலத்தில் மூடியிருந்த நேரத்தில், தங்களது சொந்த நிதியில் அவர்கள் பராமரிப்புப் பணிகள் செய்து தற்போது கடைகளை நல்ல நிலையில் வைத்திருக்கின்றார்கள். இந்நிலையில், நகருக்கு மிக அருகில் ஏற்கெனவே நகராட்சி குப்பைகள் கொட்டப்பட்டு,*

2023 ஏப்ரல் 6] [திரு. கடம்பூர் ராஜூ]

இப்போது குப்பைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்ட ஒரு இடத்தில், 5 ஏக்கர் நிலம் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கின்றது. எனவே, அந்த இடத்தில் மாற்று ஏற்பாடாக புதியதாக கடைகளைக் கட்டி, அரசிற்கு வருவாய் கிடைக்கின்ற வகையில் அங்கே உள்ள வியாபாரிகளும், பொதுமக்களும் அவற்றைப் பயன்படுத்துகின்ற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் ஏற்கெனவே, 396 கடைகள் இருந்ததாகவும், இப்போது புதியதாக 250 கடைகள் மட்டுமே கட்டப்படுவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அருகில் இருக்கின்ற 10, 15 ஊர்களில் இருந்து பொதுமக்கள் வரவும், 400-க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் உள்ளே சென்று வரவும், அங்கு அதிக வசதி செய்யப்படவேண்டும் என்பதற்காகத்தான் கடைகளைக் குறைத்து, இடங்களை அகலப்படுத்திக் கொடுப்பதாக, நம்முடைய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இருந்த கடைக்காரர்களுக்கு மீண்டும் அந்தக் கடைகளைத் தரவேண்டுமென்று சொன்னால்— பக்கத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு 5 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். குப்பைகள் அகற்றப்பட்ட இடத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு, Pollution Control Board அனுமதியைப் பெறவேண்டும். ஏனென்றால், அந்த இடத்தில் கடைகளை அமைத்தால் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும் என்று தெரியாது. இருந்தாலும் அதை ஆய்வு செய்து, அத்தனை பேருக்கும் கடைகளை கட்டித்தருகின்ற பணி மேற்கொள்ளப்படும். மேலும், ESI மருத்துவமனை அருகில் வேறு ஓர் இடம் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அதையும் தொழிலாளர் நலத் துறையிடம் கேட்டு, அவர்கள் இடம் அளித்தார்கள் என்றால் அத்தனை பேருக்கும் கடைகள் கட்டித்தர ஆவன செய்யப்படும்.